## சுருக்கம்

சிலை – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட கே.அபிசேகபுரம் கிராமம் – நீதிமன்றம் முன்பு உள்ள மேடை விநாயகர் பின்புறம் உள்ள முக்கோணப்பகுதி இடத்தில் – இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் திரு.வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசாணை (நிலை) எண். 149** **நாள்: 06.8.2008**

**படிக்கப்பட்டது :**

1)அரசாணை (நிலை) எண்.221, நநிமகுவ (நநி5) துறை, நாள் 20.11.98
2) மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி,
கடிதம் ந.க. எண்.38670–2007(இ3) நாள் 4.6.08
3)ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கடிதம்
ந.க.எண். எப் 1/5878/2006/மையம் , நாள் 27.6.2008

-----

**ஆணை:**

இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்கள், திரு.வ.உ.சி.சிலை அமைப்புக் குழுவின் செயலாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட கே.அபிசேகபுரம் கிராமம், நீதிமன்றம் முன்பு உள்ள மேடை விநாயகர் பின்புறம் உள்ள முக்கோணப்பகுதி இடத்தில் சிலை அமைக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விண்ணப்பம் செய்துள்ளார் என்றும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் மாவட்ட ஆட்சியர் மூலம் அரசின் அனுமதி பெற்று மேற்படி இடத்தில் சிலை வைக்க ஒப்புதல் அளித்து மாமன்றத் தீர்மானம் எண்.194, நாள் : 20.7.2007–ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2) மேலும் மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி தமது அறிக்கையில் சிலை அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள பிரஸ்தாப இடமானது, திருச்சிராப்பள்ளி வட்டம், கே.அபிசேகபுரம் கிராமம், வார்டு எண். ஜே ப்ளாக் எண்.3, நகரளவு எண்.6–ல் பகுதி 0.0.434 சமீ கிராம கணக்கின்படி வண்டி ஸ்டாண்டு ரோடு என்று பதிவாகி திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ளது என்றும், மேற்படி இடம் காலியாக உள்ளது எனவும், இதில் சுதந்திரப் போராட்ட வீரர் திரு.வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையை அமைக்க பொது மக்கள் எவரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றும், இவ்விடத்தில் சிலை வைத்தால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3) மேலும் முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி சிலை அமைப்புக் குழுவினரே சிலை நிறுவுவதற்கான செலவினையும் அதன் பராமரிப்பையும் ஏற்றுக் கொள்ளுவதாக தெரிவித்துள்ளார்கள் எனவும், சிலை அமைப்பதற்கு திருச்சிராப்பள்ளி மாநகர காவல் துறை ஆணையர் அவர்கள் தமது ஒப்புதலை தெரிவித்துள்ளார் என்றும், நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர், மேற்படி சிலை வைக்க கோரப்பட்டுள்ள இடம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமானது என அறிக்கை அளித்துள்ளதாகவும் தெரிவித்து தடையின்மை சான்று வழங்கி அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தையும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினையும் அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு , அதனடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்குட்பட்ட கே.அபிசேகபுரம் கிராமம், வார்டு எண்.ஜே.ப்ளாக் எண்.3, நகரளவு எண். 6–ல் பகுதி, (0.0434 ச.மீ.) நீதிமன்றம் முன்பு உள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான மேடை விநாயகர் பின்புறம் உள்ள முக்கோணப் பகுதி இடத்தில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் திரு.வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையினை சிலை அமைப்புக் குழுவின் செலவில் அமைப்பதற்கும் மற்றும் பராமரித்து பாதுகாக்கவும் அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

கே.தீனபந்து,
அரசு முதன்மைச் செயலர்.

பெறுநர்
வா.நாகராஜபிள்ளை, பொதுச் செயலாளர்,
வ.உ.சி. பேரவை,
41, தெற்கு பிள்ளையார் கோவில் தெரு,
வரகனேரி, சிலை அமைப்புக் குழு,
திருச்சிராப்பள்ளி –8.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.
ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5,
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர்,சென்னை–9.
மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகல்
பொது(ச(ம)ஒ) துறை, சென்னை –9
நநிமகுவ (நநி5/மாந1/அந2) துறை
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.